ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# தூயவன் தீதில் இராமாநுசன்

இராமாநுச நூற்றந்தாதியிலிருந்து ஒரு பாசுரம். 42ம் பாசுரம்

ஆயிழையார் கொங்கை தங்கும் அக்காதல் அளற்றழுந்தி
மாயும் என்னாவியை வந்தெடுத்தான் இன்று மாமலராள்
நாயகன் எல்லா உயிர்கட்கும் நாதன் அரங்கன் என்னும்
தூயவன் தீதில் இராமாநுசன் தொல்லருள் சுரந்தே

இங்கே இராமாநுசற்கு இரண்டு அடைமொழிகள் கூறப்பட்டுள்ளன: தீதில் இராமாநுசன், மற்றும் தூயவன் இராமாநுசன். ஒன்றின் மூலமாக அவன் தோஷ குணங்கள் அற்றவன் என்று கூறப்பட்டுள்ளது. மற்றதன் மூலமாக அவன் தூய குணங்களில் பரிபூர்ணன் என்று கூறப்பட்டுள்ளது.

மேலெழப் பார்க்கில், இரண்டுமே ஒரு விஷயத்தையே கூறுவது போல் தோன்றும். அப்படியென்றால், இதில் புனருக்தி தோஷம் உள்ளதோ என்ற சங்கை ஏற்படக் கூடும். அதாவது, சொன்ன விஷயத்தையே மீண்டும் சொல்லும் தோஷம்.

வேறு க்ரந்தங்களில் பார்க்கில், இது போன்ற தொடர்களைக் காண நேரிடுகிறது.

ஷரணாகதி கத்யத்தில், எம்பெருமானார் ஸ்ரீமந் நாராயணனுக்கு இது போன்ற அடைமொழிகளை இடுகிறார்: "அகில ஹேய ப்ரத்யநீக கல்யாணைகதாந".

மணவாள மாமுனிகளும் தம்முடைய உபதேச ரத்தினமாலையில் இது போலவே இரண்டு பாசுரங்களை இயற்றியுள்ளார். நல்ல மணம்" என்று துவங்கும் 69ம் பாசுரம்; "தீய கந்தம்" என்று துவங்கும் 70ம் பாசுரம்.

முதலில் ஷரணாகதி கத்யத்தைப் பார்ப்போம். "அகில ஹேய ப்ரத்யநீக" என்றவித்தால், ஒரு தாழ்ந்த குணமும் இல்லாதவன் என்று கூறப்பட்டது. ஆனால் அதை மட்டும் சொன்னால், கல்யாண குணங்கள் உடையவன் என்பது தேறாது. ஒரு குணமும் இல்லாதவனைக் கூட (நிர்குணன்) இந்த பதத்தினால் கூறலாம். அப்படி அமையாமலிருக்க, கூடவே "கல்யாணைகதாந" என்று கல்யாண குண பூர்த்தியைக் கூறினாராயிற்று.

இது போலவே, உபதேச ரத்தினமாலையிலும், தீயவரின் ஸஹவாசம் கூடாது என்பதாலேயே நல்லவர்கள் ஸஹவாசம் அமைந்தது என்பது கிடையாதாகையாலேயே இரண்டையும் தனித்தனியாகக் கூறினாராயிற்று.

ஆகவே, தூயவன் என்பதும் தீதில் என்பதும் இரண்டு வெவ்வேறு விஷயங்களைக் குறிக்கும் என்பது தெளிவு. அவை என்ன?

இதற்கு விடையை நாம் இராமாநுச நூற்றந்தாதியிலேயே தேடக் கூடும்.

103ம் பாசுரத்தைப் பார்ப்போம்.

ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

வளர்ந்த வெங்கோப மடங்கலொன்றாய் அன்று வாளவுணன்
கிளர்ந்த பொன்னாகம் கிழித்தவன் கீர்த்திப் பயிர் எழுந்து
விளைந்திடும் சிந்தை இராமாநுசன் என்தன் மெய்வினை நோய்
களைந்து நன்ஞானம் அளித்தனன் கையில் கனி என்னவே

இங்கேயும் எம்பெருமானாற்கு இரண்டு அடைமொழிகளைக் காணலாம். ஒன்று, வினை நோய் களைதல்; மற்றொன்று, நன்ஞானம் அளித்தல். இது போலவே திருப்பாணாழ்வாரின் அருளிச்செயல்: "பாரமாய பழவினை பற்றறுத்து என்னைத் தன் வாரமாக்கி வைத்தான்".

"தூயவன் தீதில்" என்பதையும் "வினை நோய் களைந்து நன்ஞானம் அளித்தனன்" என்பதையும் இணைக்கப் பார்ப்போம்.

அப்படி ஒரு வகையில் சேர்வது - வினை நோய் களைதல் என்பது தீதில்லா குணம் என்றும் நன்ஞானம் அளித்தல் என்பது தூய குணம் என்றும் ஆகும்.

எம்பெருமானுடைய எண்ணிறந்த கல்யாண குணங்களில் இரண்டு இங்கே கொள்ளத் தக்கவை. ஒன்று, சேதனனுடைய குறைகளை கணிசியாமை அல்லது போக்யமாகக் கொள்கை; இரண்டாவது, அவனுக்கு உயர்ந்த பேற்றான பரமபதத்தை அளிக்கை. முதல் கார்யமே இரண்டாவதையும் சம்பவிக்காதோ எனில் - எந்த நியமம் இல்லை. ஏனெனில், கர்மங்களைக் களைதல் மட்டும் செய்தால் அது சேதனனை கைவல்யத்திலும் கொண்டு சேர்க்கலாம். அதன்றி, பரமபதத்தை அடைந்து நித்ய கைங்கர்யம் செய்வதே மண்ணவர் விதி. ஆகையால் இரண்டிலும் பரமபதம் அளித்தலே உத்தமம் என்பது பூர்வர்களின் கருத்து.

இவ்விரண்டு குணங்களும் எம்பெருமானார்க்கும் பொருந்தும். ஸ்வாமியின் உயர்ந்த திருநாமம் உடையவர் அன்றோ. இவ்விரண்டும் 52ம் பாசுரத்தில் தெளிவாகவே கூறப்பட்டுள்ளன: ""இருவினை தீர்த்தான்" மற்றும் "ஆர்த்தான் அரங்கன் செய்ய தாளிணையோடு".

ஆகையால், "தீதில்" என்றவித்தால் நம் வினைகளைக் களைதல் அல்லது போக்யமாகக் கொள்ளுதல் என்று கொள்ளலாம். மேலும் தீது இல்லாமையாவது தம்முடைய வினைகளைக் களைதல் அன்றி தம்மை அடைந்தவர்களின் வினகைகளைக் களைதலுமாம். தூய்மை என்றவித்தால் உயர்ந்த பேற்றை ஆளித்தல் என்று கொள்ளலாம். மேலும் தூய்மையாவது தாம் பேற்றை அடைவது மட்டுமன்றி தம்மை அடைந்தவர்கள் அனைவர்க்கும் அதே நிலையைப் பெற்று தருதலுமாம். இதுவே நல்ஞானம் எனக் கூறப்படுகிறது.

இவ்வர்த்தமே "அனகன் அன்பன்" என்பதிலும் கூறப்பட்டது என்று கொள்ளத் தடையில்லை.

பேற்றை அளித்தலை மட்டும் கூறியிருக்கலாமே என்றால் - அது போதாது. கர்ம வினைகளைக் களைந்தே கைங்கர்யத்தைப் பெற வேண்டும். ஏனெனில், கர்மங்களும் அநாதி; அவற்றின் வாஸநா சம்பந்தமும் அநாதி. பழவினை அன்றோ. ஆழ்வாரும் "தொன்மாவல்வினைத் தொடர்" என்றார்.

ஆக, தீதில் என்றும் தூயவன் என்றும் சொல்லியதில் புனருக்தி தோஷம் இல்லை என்பதாயிற்று.

**எம்பெருமானார் திருவடிகளே ஶரணம்**
**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்**